பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 07 சனிக்கிழமை 21.05.2022 கதிர் 90

## காலிமுகத்திடல் வன்முறை; இதுவரை 16 பேர் சிக்கினர்!

காலிமுகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டிப் பகுதிகளில்இடம்பெற்றவன்முறைச்சம்பவங்கள் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் ஹோகந்தர பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வு திணைக் களத்தினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எதுல் கோட்டை பகுதியைச் சேர்ந்த 43 வயதானவரே இவ்வாறு

☞2

# 20ஐ உடன் நீக்குங்கள்!

## ரணிலுக்குக் கரு ஜயசூரிய தலைமையிலான 155 சமூகச் செயற்பாட்டாளர்கள் அவசர கடிதம்



**நாட்டுமக்கள்மீதான அடக்குமுறைகளை நிறுத்துவதற்கும், 20 ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக நீக்குவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு முன்னாள் சபாநாயகரும் சமூக செயற்பாட்டாளருமான கரு ஜயசூரிய தலைமையிலான 155 சமூகச் செயற்பாட்டாளர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்துமூலமானகோரிக்கையைமுன்வைத்துள்ளனர்.**

☞2

## இ.தொ.காவுக்கு ரணில் அழைப்பு



சர்வகட்சி இடைக்கால அரசின் அமைச்சரவையில், அங்கம் வகிக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதம அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கமைய புதிய அமைச்சரவை பெயர்ப்பட்டியலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசில், மொட்டுக் கட்சி தவிர, ஏனைய

☞2


## அவசரகாலச் சட்டம் நீக்கம்

நாட்டில் அமுலில் இருந்த அவசரகாலச் சட்டம் நேற்றிரவு முதல் நீக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 6ஆம் திகதி முதல் நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

நாட்டில் அன்றாடச் செயற்பாடுகளை பேணுவதற்கும், மக்களுக்கு அத்தியாவசியமான சேவைகளை வழங்குவதற்கும், மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்துக்கமைய அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## 'மே – 9' வன்முறை: 1,348 பேர் கைது!



'மே - 9' வன்முறைச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் நாடு முழுவதும் 1,348 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பிரிவு இதனை இன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைதானவர்களில் 638 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும், 654 பேருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## மொட்டுவின் எம்.பிக்கள் இடையே அமைச்சுப் பதவிகளுக்குப் போட்டி

புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தியில் கடும் போட்டி ஆரம்பித்துள்ளது என அரசின் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இவர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரை அடிக்கடி சந்தித்தும், பல்வேறு தரப்பினர் ஊடாகவும் தமக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கோரிக்கை முன்வைத்தும் வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட அமைச்சரவையின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள 23 அமைச்சுக்களுக்கு ஏற்கனவே 13 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

☞2

## மட்டக்களப்பில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணம்!

மட்டக்களப்பு, சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தணமடு ஆற்றுப்பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

☞2

## பாடசாலை ஆசிரியர் அறைந்ததால் மாணவனின் செவிப்பறை பாதிப்பு

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

ஆசிரியர் அறைந்ததால் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவனின் செவிப்பறை பாதிப்படைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

☞2

## பற்றி எரிகின்ற நெருப்பில் வைக்கோலைப் போடாதீர்!

### இனி நாடாளுமன்றம் வரமாட்டேன் என்று அலி சப்றி சபையில் சபதம்



நாட்டின் பொருளாதாரம் உக்கிரமடைந்துள்ளதையடுத்து அனைவரும் இணைந்து பொறுப்புடன் செயற்பட வேண்டுமே தவிர குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக எரியும் நெருப்பில் வைக்கோலைப் போட முற்பட வேண்டாம். அரசியல் நோக்கங்களைக் கைவிட்டு அனைவரும் உண்மை நிலையை உணர்ந்து

☞2

## கொழும்பில் பல மணிநேரம் நீர்வெட்டு!

அத்தியாவசிய திருத்தப்பணிகளின் காரணமாக கொழும்பு மாவட்டத்தில் இன்று நீர்வெட்டு இடம்பெறவுள்ளது.

அதற்கமைய இன்றிரவு 10 மணி முதல் நாளை (22) காலை 8 மணி வரை, கொழும்பு 12,13,14,15 ஆகிய பகுதிகளில் 10 மணி நேர நீர் வெட்டு இடம்பெறவுள்ளது எனத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்றரை மணித்தியாலங்கள் நாமலைத் துருவிய சி.ஐ.டி.



இலங்கையில் இம்மாதம் 9 ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டி பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று மூன்றரை மணிநேரம் வாக்குமூலம்

☞2

## எட்டிப் பார்த்த குழந்தைக்கு எமனாக மாறியது லொறி!

பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த குழந்தை ஒன்று வீதிக்கு அருகாமையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியில் மோதி உயிரிழந்த சம்பவம் மாவனெல்லை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த குழந்தை திடீரென ஜன்னலுக்கு வெளியில் தலையை நீட்டி எட்டிப் பார்த்துள்ளது. இந்தத் தருணத்தில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பலத்த காயமடைந்த

☞2

## மொட்டுவின் எம்.பிக்கள் இடையே ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதிய அமைச்சரவையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குச் சுமார் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங் கப்படவுள்ளது. ஏற்கனவே அந்தக் கட் சியைச் சேர்ந்த 5 பேர் அமைச்சர்களா கப் பதவியேற்றுள்ளனர்.

மேலும் ஐந்து அமைச்சுப் பொறுப் புக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்ன ணிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 40 நாடா ளுமன்ற உறுப்பினர்கள் இந்த அமைச்சுப் பதவிகளுக்கான கோரிக்கையை விடுத் துள்ளனர்.

அமைச்சரவையில் தினேஷ் குணவர் தன மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகி யோருக்கு மேலதிகமாக இதர கட்சிகளுக்கு 11 அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட வுள்ளன.

இதர அரசியல் அணியில் அங்கம் வகிக்கும் நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, விஜயதாஸ ராஜபக்ஷ, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக் கார, நளின் பெர்னாண்டோ, டிரான் அலஸ் ஆகியோர் ஏற்கனவே அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ள னர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக் கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளுக்கு மேலும் இரண்டு அமைச்சுப் பதவிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின் றது.

மீதமுள்ள அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சர்களும், இராஜாங்க அமைச் சர்களும் அடுத்த வாரம் பதவிப் பிரமாணம் செய்துக்கொள்ளவுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர்களின் எண் ணிக்கை 30 ஆக வரையறுக்கப்படும் என வும் தெரிவிக்கப்படுகின்றது.

## பற்றி எரிகின்ற .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயற்படுவதற்கு முன்வரவேண்டும் என்று முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்றி எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடு கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக் கையில்,

நாட்டின் பொருளாதாரம் உக்கிரம டைந்துள்ளது. மக்கள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது எவ்வாறு என்பது தொடர்பிலேயே நாடாளுமன்றத்திலுள்ள அனைவரும் சிந்திக்க வேண்டும். இனியும் அரசியல் நோக்கங்களுக்காக ஒருவர் மீது ஒரு வர் விரல் நீட்டிக் கொண்டு செயற்பட முற்படக்கூடாது. அவ்வாறானால் நாம் விஜயன் காலத்திலிருந்தே அதை செய்ய வேண்டிவரும்.

நாட்டின் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண முடியுமென்ற நம்பிக்கை யுடனேயே நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். நம்பிக்கையுட னேயே 69 இலட்சம் மக்கள் ஜனாதி பதிக்கு வாக்களித்தனர். நான் நிதி அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்ப தற்கு முன்னர் 42 மில்லியன் ரூபா வருமான வரி நிலுவையை செலுத்தி விட்டே பதவியைப் பொறுப்பேற்றேன். அரசியல் மூலம் நான் ஒரு சதம் கூட உழைக்கவில்லை. ஆனால், வீடு எரி வதைப் பார்த்து மகிழ்ச்சியடையும் தரப்பினரையும் நான் பார்க்கின்றேன். அந்தளவு மோசமான கலாசாரம் எமது நாட்டில் தலைதூக்கி இருக்கின்றது.

இதன் பின்னர் நாடாளுமன்றத் துக்கு வருவதற்கு நான் நினைக்கமாட் டேன்.

நாட்டில் வருமான வரி செலுத்தாத வர்கள் தொடர்பில் தேடிப் பார்க்க வேண்டும். சுங்கத் திணைக்களத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் தொடர் பில் கவனம் செலுத்த வேண்டும். நாட் டின் வருமான வழிமுறைகள் தொடர் பில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.

## மூன்றரை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெற்றனர்.

நேற்று மாலை 4 மணிக்குக் குற் றப் புலனாய்வு திணைக்களத்தில் முன் னிலையாகியிருந்த அவர், இரவு 7.30 மணியளவில் அங்கிருந்து வெளியேறி னார்.

காலிமுகத்திடல் மற்றும் கொள்ளுப் பிட்டியில் ஏற்பட்ட வன்முறைச் சம்ப வங்கள் தொடர்பில் பல தரப்பினரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த, மிலான் ஜயதிலக்க உள்ளிட்ட 15 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## எட்டிப் பார்த்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குழந்தை மாவனெல்லை மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்ட பின்னர் உயிரிழந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனல்லை - ரம்புக்கனை வீதி யில் கிரிகல சந்திக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள் ளது.

உஸ்ஸாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த மூன்றரை வயது குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## மட்டக்களப்பில் யானை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிவேம்பு , வில்லுக்கொலனி பிரதே சத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வைத்தியராசா கோவிந்தராசா (வயது - 37) என்பவரே இவ்வாறு பலியா கியுள்ளார்.

தனது செங்கல் உற்பத்தி செய்யும் இடத் துக்குச் சென்று அங்கு வேலை செய்து விட்டு, இரவாகியமையால் தான் தாக்கியி ருக்கும் குடிசைக்குச் சென்று இருக்கும் போது காட்டுக்குள் இருந்த யானை இவ ரைத் தாக்கியுள்ளது.

படுகாயமடைந்த இவர் அருகில் உள்ள வர்களின் உதவியுடன் செங்கலடி வைத்தி யசாலைக்கு கொண்டு சென்ற பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணம டைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை ஆசிரியர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழில் உள்ள பிரபல பாடசாலை ஆசிரி யரே கடந்த செவ்வாய்க்கிழமை இவ்வாறு செயற்பட்டுள்ளார்.

மாணவன் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவரது செவிப் பறை சவ்வு பாதிக்கப்பட்டுள்ளது என மருத் துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பொலிஸ் பிரி வுக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தையும் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இ.தொ.காவுக்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சிகளுக்கான, அமைச்சுகளை ஒதுக்கும் பொறுப்பு பிரதமரிடமே கையளிக்கப்பட்டுள் ளது. அந்தவகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜீவன் தொண்டமானின், பெயரைப் பரிந்துரைத்துள்ளார்.

அமைச்சுப் பதவியை ஏற்பதற்கே காங்கிரஸ் தரப்பு கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்திருந்தாலும், இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

இந்தியா சென்றுள்ள இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி. ஆகியோர் நாடு திரும்பிய பின்னர், இது சம்பந்தமாக கலந்துரையாடி இறுதி முடிவெ டுக்கப்பட்டுள்ளது.

கட்சி ஒப்புதல் வழங்கும் பட்சத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஜீவன் தொண்டமான் அமைச்சராகப் பதவியேற் கக்கூடும்.

## காலிமுகத்திடல் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் இது வரையில் பெண் ஒருவர் உட்பட 16 பேர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தி னரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.

## 20ஐ உடன் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மீதும் அவர் தலைமையிலான அரசின் மீதும் தொடர்ச்சியாக மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்த நிலையில் தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான இடைக்கால அரசு ஒன்று நிறு வப்பட்டது. எனினும், இந்த இடைக்கால அரசுக்கும் பொதுமக்கள் மத்தியில் அதி கமான எதிர்ப்பு எழுந்திருக்கின்றது. இந் நிலையிலேயே முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான 155 பேர் இவ்வாறு கடிதம் ஒன்றை எழுதி கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்கள் அங்கீகரிக்கக்கூடிய அரசை அமைத்து நிவாரணங்களை வழங்குமா றும் கருஜயசூரிய உள்ளிட்ட 155 சிவில் சமூகப்பிரதிநிதிகள் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இடுக்கண் களையும் அயலுறவு

பொருளாதார நெருக்கடியில் அதல பாதாளத்தில் விழுந்திருக்கும் இலங்கைக்கு இந்த இக்கட்டு சமயத்தில் தொடர்ந்து பல உதவிகளை வழங்கிக் கைகொடுத்து வரும் இந்தியா அந்த வரிசையில் மற்றொரு சகாயத்தை செய்திருக்கின்றது.

அத்தியாவசியப் பொருள்களை இலங்கை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்காக 100 கோடி அமெரிக்க டொலர் (சுமார் 35 ஆயிரம் கோடி ரூபா) பெறுமதியான கடனை 'ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா' மூலம் இலங்கை பெற்றுக்கொள்ள இந்திய அரசு ஏற்பாடு செய்திருந்தது.

வழமையான ஒழுங்குகளின்படி, இந்தக் கடன் தொகைக்கான முழு செலுத்துகை 'ஆசிய கிளியரிங் யூனியன்' ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

வங்கதேசம், பூட்டான், இந்தியா, ஈரான், மாலைதீவு, மியன்மார், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகள் தமக்குள் நாணயப் பரிவர்த்தனை செய்வதற்கான அமைப்பு இதுவாகும். இந்நாடுகளின் மத்திய வங்கிகள் ஒன்றிணைந்து தங்களுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல் தொகையை கணக்கிட்டு பிரிப்பதற்கான அமைப்பு இது. கட்டண அறவீட்டு ஒழுங்கு ஏற்பாடு.

மேற்படி நாடுகள் தமக்கிடையிலான வர்த்தகப் பரிவர்த்தனையை இந்த அமைப்பு ஊடாக அமெரிக்க டொலர், ஐரோப்பிய யூரோ, ஜப்பானிய யென் மூலமாகச் செய்ய வேண்டும். அதுதான் வழமையான ஏற்பாடு.

ஆனால், அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லாமல் அல்லாடும் இலங்கை இந்தக் கடனை இந்தியாவிடமிருந்து பெற்றாலும், அதை மீளச் செலுத்த முடியாமல் – அதற்கான அந்நிய செலாவணி இல்லாமல் – மாண்டு போகும் என்று பலரும் விமர்சித்தனர்.

ஆனால் இந்த கடனுக்கு உரிய மீள் செலுத்துகைக் கொடுப்பனவை ஆசிய கிளியரிங் யூனியனைத் தவிர்த்து, நேரடியாக ரூபாவில் செலுத்த முடியும் என்ற ஏற்பாட்டை, இலங்கைக்கான மேலும் ஒரு சகாயமாக அறிவித்திருக்கின்றது புதுடில்லி.

இந்தக் கடனைச் செலுத்துவதற்காக கொழும்பு இனி டொலரையோ அல்லது யூரோவையோ அல்லது ஜப்பான் யென்னையோ தேட வேண்டி இருக்காது.

இந்தத் திட்டத்தின் கீழ் பொருள்களை ஏற்றுமதி செய்யும் இந்திய நிறுவனம் அதற்கான கட்டணத்தை இந்திய ரூபாவில் குறிக்கும். இறக்குமதி செய்யும் இலங்கை நிறுவனம் அந்தக் கட்டணத்தை இங்கு அதற்குச் சமனான பரிவர்த்தனைத் தொகையில் – இலங்கை ரூபாயில் – செலுத்தினால் போதுமானது. அந்தப் பெறுமதி, சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளருக்கு அல்லது நிறுவனத்துக்கு அவரது இந்தியக் கணக்கில், இந்திய ரூபாயில் வரவிடுவதை இந்திய ரிசர்வ் வங்கி பார்த்துக்கொள்ளும்.

இந்த முறைமையின் கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான அந்நிய செலாவணிக் கொடுப்பனவை ஒதுக்கீடு செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் அனுமதிக்கு இலங்கை இறக்குமதியாளர்கள் வாரக்கணக்கில் காத்துக்கிடக்க வேண்டிய தேவை இல்லை.

உதவி செய்வது நன்று. அதை அன்றே கிடைக்கச் செய்வது அதனினும் நன்று. அப்படி ஒரு முறைமையை அருகிலுள்ள பாரத தேசம் பரிவோடு இலங்கைக்குச் செய்திருக்கின்றது.

இன்றைய நெருக்கடி நிலையில் இது அளப்பரிய உதவி. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் சமயம் பார்த்து வழங்கும் அத்தியாவசிய உதவியாக இது மெச்சப்பட வேண்டும்.

## கண்ணுக்குத் தெரியாத சக்தியினால் மஹிந்த கௌரவமான பிரியாவிடையை இழந்துள்ளார்

### மஹிந்தானந்த வேதனை



கண்ணுக்குத் தெரியாத சக்தியால் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது கௌரவமான பிரியாவிடையை இழந்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (வெள்ளிக்கிழமை) உரையாற்றிய அவர் –

1977 இல் நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம் என்பது எனக்கு நினைவிருக்கிறது. எனது தந்தை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். மூன்று முறை எங்கள் வீட்டுக்குத் தீ வைத்துள்ளனர். எனக்கு 6 வயது இருக்கும்போது நாங்கள் வாரக்கணக்கில் காட்டில் ஒளிந்திருந்தோம்.

தலைவரின் பிரியாவிடை நமது கண்ணுக்கு தெரியாத சக்தியால் பேராசையின் துரதிர்ஷ்டவசமான இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அவர் கண்ணியத்துடன் விடைபெறும் முறையை இது மாற்றியது. மஹிந்த ராஜபக்ஷ போன்ற கௌரவமான தலைவர் இப்படியொரு பிரியாவிடையை எதிர்பார்த்திருக்க முடியாது.

இந்த நெருக்கடியைப் பற்றி பேசினோம். கேட்கவில்லை. செவிடான யானைக்கு வீணை வாசிப்பது போல் இருந்தது.

காலிமுகத்திடல் போராட்டத்தின் மீதான தாக்குதல்கள் மற்றும் வீடுகள் எரிப்பு குறித்து தனி விசாரணை வேண்டும். இந்த மோசடி அரசியலை நிறுத்த வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சர்வகட்சி அரசாங்கத்துக்கு பதிலாக முன்னாள் அரசே மீண்டும் ஆட்சியில்!

### மைத்திரிபால அதிருப்தி



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அனுமதியின்றியே தமது உறுப்பினர்கள் சிலர், அமைச்சுக்களை பொறுப்பேற்றுள்ளனர் எனக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்

தமது கட்சி, அரசாங்கத்தின் சிறந்த செயற்திட்டங்களுக்கு ஆதரவளிக்க முன்வந்திருந்தது.

அமைச்சரவையில் பங்கேற்ற தீர்மானம் எடுக்கவில்லை. இந்தநிலையில் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக சிலர், அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்டனர் என மைத்திரிபால குறிப்பிட்டார். முன்னதாக நாட்டைக் கட்டியெழுப்ப, சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைப்பதாக கூறப்பட்டது. எனினும் இன்று அந்த கொள்கை மாற்றப்பட்டு, முன்னர் இருந்த அரசாங்கமே மீண்டும் ஆட்சியை நடத்துவதை காணமுடிகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

## பவித்ரா மற்றும் அவரது கணவர் குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஆஜர்!



முன்னாள் அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி மற்றும் அவரது கணவரான காஞ்சன கருணாரத்ன ஆகியோர் குற்றப்புலனாய்வு பிரிவில் ஆஜராகியுள்ளனர்.

வாக்குமூலம் வழங்குவதற்காக அவர்கள் இவ்வாறு குற்றப்புலனாய்வு பிரிவில் ஆஜராகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 9 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் இவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## நாட்டில் எரிபொருள்கள் பற்றாக்குறை சாதாரணதர பரீட்சையைப் பாதிக்கும்

எரிபொருள் பற்றாக்குறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை பாதிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் எரிபொருள் பிரச்சினைக்கு உடன் தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகும் சாதாரண தரப் பரீட்சையில் அது தாக்கத்தை செலுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

35 ஆயிரம் ஆசிரியர்களும் அதிபர்களும் பரீட்சைக் கடமையில் ஈடுபட உள்ளனர் எனவும், இதில் அநேகமானவர்கள் பல கிலோ மீற்றர்கள் பயணம் செய்ய வேண்டியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பரீட்சை கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் பெறுவதற்கு முன்னுரிமை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கே.டி.எஸ். ருவன்சந்திர இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய அவர்களுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை எரிபொருளினை பெற்றுக் கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்று பரீட்சை நியமனக் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஊடாக அனைத்து எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்களுக்கும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காரணமாக

# கனடாவில் சீன தொலை தொடர்புத் நிறுவனங்களுக்கு தடை விதிப்பு




தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்ஏற்படுத்தும்வகையில் நெட்வொர்க் சேவைகளை வழங்குவதால், சீன தொலை தொடர்பு நிறுவனங்களின் சேவைக்கு தடை விதிக்கப்படுகிறது என்று கனடா அமைச்சர் தெரிவித்தார். அமெரிக்கா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் சீன தொலைத்தொடர்பு நிறுவனமான ஹுவாய், அந்நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக கூறி அதனை தடை செய்தன.

இந்நிலையில் கனடா தொலைதொடர்பு அமைச்சர் பிராங்கோயிஸ் பிலிம் கூறுகையில், 'சீன தொலைத் தொடர்பு நிறுவ னங்களான ஹுவாய் மற்றும் இசட்டிஇ ஆகியவற்றின் 5ஜி மற்றும் 4ஜி வயர்லெஸ் வசதிகளுக்கு கனடா அரசு தடை செய்துள்ளது. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில், அதன் நெட்வொர்க் சேவைகள்உள்ளன. அதனால், ஏற்கனவே இந்த வசதியை பெற்றுள்ள கனடா நிறுவனங்கள், தங்களது இந்தச் சேவையை முடக்க வேண்டும்.

மேலும், அதன் சாதனங்களை அகற்ற வேண்டும். இதற்கான கால அவகாசம் வரும் ஜூன் 28ம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, தற்போதுள்ள 4ஜி நெட்வொர்க்கின் உபகரணங்களை வரும் 2027ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்குள் அகற்ற வேண்டும்.

இந்த நிறுவனங்களுக்கு அரசின் சார்பில் எந்த நிதி உதவியும் வழங்கப்படாது' என்று தெரிவித்தார்.

# விமான பணிப்பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு தந்த எலான் மஸ்க்?

பரபரப்பு குற்றச்சாட்டு



*தவறை மறைப்பதற்காக 2018-ஆம் ஆண்டு எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மூலம் 1.93 கோடி ரூபா தொகையும் கொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.*

*உலகப் பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க் விமான பணிப்பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தார் என பரபரப்பு குற்றச்சாட்டு ஒன்று எழுந்துள்ளது.*

*கடந்த 2016ஆம் ஆண்டு அவர் தனி விமானத்தில் பறந்தபோது அங்கு இருந்த பணிப்பெண்ணிடம் பாலியல் ரீதியாக தவறாக நடந்துகொண்டார் என்று பிரபல செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.- இதையடுத்து அந்த தவறை மறைப்பதற்காக 2018ஆம் ஆண்டு எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மூலம் 1.93 கோடி ரூபா தொகையும் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.*


# பின்லாந்துக்கு எரிவாயு அனுப்புவதை நிறுத்தியது ரஷ்யா



**பின்லாந்துக்கு எரிவாயு அனுப்புவதை ரஷ்யா நிறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நேட்டோ கூட்டமைப்பில் பின்லாந்து இணைந்ததை அடுத்து எரிவாயு அனுப்புவதை ரஷ்யா நிறுத்தியுள்ளது.**

# பாலியல் உறவால் வேகமாக பரவும் மங்கிபாக்ஸால் ஐரோப்பிய நாடுகளில் பீதி

உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை



அமெரிக்கா போன்ற நாடுகளில் தற்போது 'மங்கிபாக்ஸ்' என்ற வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகிறது. முக்கியமாக பாலியல் உறவால் தொற்று வேகமாக பரவுவதால், முன்னெச்சரிக்கையுடன் இருக்க உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. கொரோனா தொற்று பரவல் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகிய நிலையில், தற்போது 'மங்கிபாக்ஸ்' என்ற வைரஸ் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வேகமாக பரவி வருகிறது. இந்த வைரசானது முதன்முதலில் கடந்த 1958ம் ஆண்டு கோபன் ஹேகனில் உள்ள ஸ்டேட் சீரம் இன்ஸ்டிடியூட்டில் நடைபெற்ற சைனோமோல்கஸ் குரங்குகளின் கால்களில் இருந்து கண்டறியப்பட்டது. இந்த வைரஸ் பெரியம்மை, கவுபாக்ஸ், குதிரைப்புலி மற்றும் ஒட்டகம் போன்ற விலங்குகளால் பரவும் நோய்களுடன் தொடர்புடையது.

தொடர்ந்து 1966ம் ஆண்டில் ரோட்டர்டாமில் உள்ள மிருகக்காட்சி சாலையில் இருந்த குரங்கிடம் இருந்து இந்நோய் பரவியது. ஆப்பிரிக்க நாடுகளில் மட்டுமின்றி, 2003ம் ஆண்டில், அமெரிக்காவில் மங்கிபாக்ஸ் வைரஸ் பரவியது. கிட்டதட்ட 47 பேர் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு அவர்களுடைய செல்லப் பிராணிகளிடம் இருந்து இந்த வைரஸ் தொற்று பரவியது. அதேபோல் நைஜீரியாவில் மங்கிபாக்ஸ் தொற்று பாதிப்பு ஏற்பட்டது. அதன்பின் 2018ல் இஸ்ரேலுக்கும், 2018ல் லண்டனிலும், 2019ல் சிங்கப்பூரிலும், நைஜீரியாவிலிருந்துவந்தபயணிகளின் மூலம் மங்கிபாக்ஸ் பரவியது.

கடந்த 1980ம் ஆண்டு வாக்கில் பெரியம்மை நோய் ஒழிக்கப்பட்டதாக உலக சுகாதார நிறுவனம் கூறினாலும் கூட தற்போது மங்கிபாக்ஸ் தொற்று அறிகுறி வேகமாக பரவி வருகிறது. இந்த மங்கிபாக்ஸ் வைரஸ் உடலுக்குள் உயிர் வாழும் காலகட்டம் 6 முதல் 13 நாள்கள் ஆகும். இதற்கு இடைபட்ட காலகட்டத்தில் பரவத் தொடங்கி, தொற்றை அதிகரிக்கச் செய்யும். நோய்த்தொற்றின் தீவிர நிலையின் போது பெரியம்மையை போல கண்ணாடி போன்ற திரவங்கள் நிரம்பிய பெரிய கொப்புளங்கள் உண்டாகும். அது உடையும்போது மெல்லிய மஞ்சள் நிற திரவம் வெளியேறும்.

குரங்குமற்றும்பிறவனவிலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவுகிறது. அதன்பின் நோய்த் தொற்று மனிதர்களிடமிருந்து பிற மனிதர்களுக்குப் பரவ ஆரம்பிக்கிறது. இந்த வைரஸ் தாக்குதலுக்கு இளம் குழந்தைகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். இம்மாத தொடக்கத்தில் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் 10க்கும் அதிகமானோருக்கு 'மங்கிபாக்ஸ்' வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது. பாலியல் உறவால் இந்த வைரஸ் அதிகம் பரவ வாய்ப்பிருப்பதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல்லில் 40க்கும் அதிகமானோருக்கும், கனடாவில் 12க்கும் அதிகமானோருக்கும், பிரிட்டனிலில் இதுவரை 9 பேருக்கும் மங்கிபாக்ஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவிலும் நேற்று ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நோய் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோருக்கு பாலியல் உறவால்தான் தொற்று பரவியிருப்பதாக அமெரிக்க நோய் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை மையம் தெரிவித்திருக்கிறது. பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய சுகாதாரத்துறை அதிகாரிகளின் தரவுப்படி, தன்பாலின சேர்க்கையில் ஈடுபடுபவர்களுக்கும், இருபாலின சேர்க்கை பழக்கமுடையவர்களிடையே தொற்று அதிகம் பரவியிருப்பதாக உலக சுகாதார நிறுவனமும் இந்த வார துவக்கத்தில் தெரிவித்திருக்கிறது.

இதுகுறித்து உலக சுகாதார நிறுவன உதவி இயக்குநர் ஜெனரல் டாக்டர் சோஸ் பால் கூறுகையில், 'ஆணுடன் ஆண் உடலுறவு கொள்பவர்களிடையே தொற்று அதிகம் பரவியிருப்பதை காணமுடிகிறது. மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கடந்த சில ஆண்டுகளில் மங்கிபாக்ஸ் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் சில வாரங்களில் குணமடைந்துள்ளனர். மிகச்சிலரே அரிதாக உயிரிழந்தனர். மங்கிபாக்ஸ் வைரஸ் காய்ச்சலுக்காக, குறிப்பிட்ட சிகிச்சை எதுவும் இல்லை. சிறப்பு மருத்துவமனையில் நோயாளிகள் தங்க வேண்டும்; இதனால் நோய்த்தொற்று பரவாது. அவர்களுக்கு பொதுவான சிகிச்சையளித்து குணமாக்க முடியும்' என்றார்.

# தொலைக்காட்சி பெண் தொகுப்பாளர்கள் முகங்களை மறைப்பது அவசியமானது

தலிபான்களின் உத்தரவால் ஆப்கானிஸ்தானில் பரபரப்பு

ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து தொலைக்காட்சிகளிலும் பெண் தொகுப்பாளர்கள் மற்றும் அறிவிப்பாளர்கள் திரையில் தோன்றும் போது முகங்களை கட்டாயம் மறைக்க வேண்டும் என்று தலிபான்கள் உத்தரவு பிறப்பித்து இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த புதன்கிழமை அன்று தலிபான்கள் இந்த ஆணையை பிறப்பித்துள்ளனர்.

ஆப்கானில் உள்ள அனைத்து பெண்களும் பொது இடங்களில் முகத்திரை அணிய வேண்டும் என்றும் அவ்வாறு அணிய மறுத்தால் தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்றும் 2 வாரங்களுக்கு முன்பு தலிபான்கள் உத்தரவிட்டு இருந்தார்கள்.

இதற்கு ஆப்கானில் உள்ள மகளிர் அமைப்பினர் கடும் எதிர்ப்பை தெரிவித்து வந்தனர். இந்த நிலையில், தொலைக்காட்சிகளில் பெண் தொகுப்பாளர்கள் மற்றும் அறிவிப்பாளர்கள் திரையில் தோன்றும் போது, முகத்தினை கட்டாயம் மறைக்க வேண்டும் என்று புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த தலிபான்களின் நகல் அனைத்து தொலைக்காட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தலிபான்களின் இந்த திடீர் உத்தரவால் அதிர்ச்சி அடைந்துள்ளதாக காபூல் தொலைக்காட்சிகளில் பணியாற்றி வரும் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆப்கானில் தலிபான்கள் தன்வசப்படுத்தியதில் இருந்து பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டு வருகின்றன. ஆண் துணை இல்லாமல் பெண்கள் பயணம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கான மேல்நிலை பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.



# குஜராத், இமாச்சல் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடையும் தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோர் பரபரப்பு டுவீட்



குஜராத், இமாச்சலப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடையும் என்று தேர்தல் வியூக வல்லுநர் பிரசாந்த் கிஷோர் கணித்துள்ளார்.

சமீபத்தில் காங்கிரஸ் கட்சியை மீட்டெடுக்க பிரசாந்த் கிஷோர் சில யுக்திகளை வகுத்து அக்கட்சியின் தலைமையிடம் கொடுத்தார். பின் அவர் காங்கிரஸில் இணையவுள்ளார் எனவும் பேசப்பட்டது. இறுதியில் அவர் காங்கிரஸில் இணையவில்லை என்பது உறுதியானது.

பிரசாந்த் கிஷோர் கொடுத்த பரிந்துரைகளை காங்கிரஸ் ஏற்கவில்லை என்றும், அவர் காங்கிரஸில் இணைவதில் சில தலைவர்களுக்கு உடன்பாடு இல்லை என்றும் கூறப்பட்டது. அதன்பின் பிரசாந்த் கிஷோர் புதிய அமைப்பு ஒன்றை தொடங்கி நடைபயணமாக சென்று மக்கள் குறைகளை கண்டறியப்போகிறேன் என அறிவித்தார். காங்கிரஸ் கட்சியும் ராஜஸ்தான் உதய்பூரில் சிந்தனைக் கூட்டம் என்று அக்கட்சியின் எதிர்காலம், வியூகங்கள் குறித்து ஆலோசனை நடத்தியது.

இந்த நிலையில் தற்போது பிரசாந்த் கிஷோர் தனது டுவிட்டர் பக்கத்தில் காங்கிரஸ் கட்சி சந்திக்கவுள்ள, குஜராத், இமாச்சல் தேர்தல் குறித்த தனது கருத்தை தெரிவித்துள்ளார். உதய்பூரில் நடந்த காங்கிரஸ் கட்சியின் சிந்தனைக் கூட்டம் பற்றி கருத்து சொல்லுமாறு என்னை அடிக்கடி கேட்டு வருகின்றனர். என்னைப் பொறுத்தவரை, அந்தக் கூட்டம் அர்த்தமுள்ளதாக எந்த முடிவையும் எட்டவில்லை. காங்கிரஸ் தற்போதைய நடைமுறையையே தொடர முடிவு செய்துள்ளது. காங்கிரஸ் தலைவர்கள் இன்னும் சிறிது காலம் நீடித்து இருக்க உறுதி செய்யப்பட்டுள்ளது.

குஜராத், இமாச்சலப்பிரதேச தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடையும் வரையிலாவது இந்த நடைமுறை தொடரும், என்று பிரசாந்த் கிஷோர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவை விட இந்தியாவில் பணவீக்கம் குறைவாகவுள்ளதாம்

### ராஜ்நாத் சிங் கருத்து



இந்தியாவில் சில்லறை பணவீக்கம் எட்டு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த ஏப்ரல் மாதத்தில் 7.8 சதவீதமாக உயர்ந்தது. மொத்த விற்பனைப் பணவீக்கம் ஒன்பது ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 15.1 சதவீதத்தை எட்டியுள்ளது. இது இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான பாதிப்பினை பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், மகாராஷ்டிரா மாநிலத்தின் புனே நகரில் பா.ஜ.க. தொண்டர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் உரையாற்றிய போது, அதிகரிக்கும் பணவீக்கம் பற்றி நாட்டில் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. கொரோனா தொற்று அதிகரித்திருந்த காலத்தில் சர்வதேச அளவில் ஒட்டுமொத்த பொருளாதாரமும் ஸ்தம்பித்தது.

ஆனால், பிரதமர் நரேந்திர மோடி, தனது விவேகமான நடவடிக்கையால் இந்திய பொருளாதாரம் வீழ்ச்சியடைவதை தடுத்து நிறுத்தினார். இதைப் பாராட்டுகிறேன், என்று தெரிவித்திருக்கிறார்.

தற்போது ரஷ்யா உக்ரைன் போர் நெருக்கடி சூழல் காரணமாக உலக அளவில் விநியோகச் சங்கிலி முறை சீர்குலைந்துள்ளது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலை, எந்த நாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது வெளிப்படையானது.

பணக்கார நாடான அமெரிக்காவில், கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத வகையில் பணவீக்கம் அதிகமாக உள்ளது என்பதை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அதை விடக் குறைவாகவே இந்தியாவில் பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், பா.ஜ.க. தொண்டர்கள் குற்ற உணர்வுடன் இருக்கக்கூடாது, என்று அவர் தெரிவித்துள்ளார்.



## கார்த்தி சிதம்பரத்தை கைது செய்வதாயின் மூன்று நாள்கள் அவகாசம் வழங்க சி.பி.ஐக்கு சிறப்பு நீதிமன்றம் உத்தரவு



250 க்கும் மேற்பட்ட சீனர்களுக்கு விசா வாங்கிக் கொடுத்தமைக்காக 50 லஞ்சம் ரூபா பெற்றார் என காங்கிரஸ் எம்.பி கார்த்தி சிதம்பரம் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக கார்த்தி சிதம்பரத்திற்கு சொந்தமான இடங்களில் சோதனை நடைபெற்றது.

இந்த வழக்கில் முன் பிணை கோரி கார்த்தி சிதம்பரம் தாக்கல் செய்த மனு டெல்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி எம்.கே.நாக்பால் முன்பு நேற்று விசாரணை வந்தது.

அப்போது கார்த்தி சிதம்பரத்தின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கபில் சிபல், இந்த வழக்கில் கார்த்தி சிதம்பரத்துக்கு தொடர்புள்ளது என்பதற்கான ஆதாரங்கள் வாக்குமூலத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை என்றும், எனவே, அவருக்கு முன்பிணை வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சி.பி.ஐ. தரப்பு வழக்கறிஞர், இந்த வழக்கு ஆரம்பகட்டத்தில் இருப்பதால் கார்த்தி சிதம்பரத்துக்கு முன்பிணை வழங்க வேண்டிய எந்த முகாந்தரமும் இல்லை, என்று வாதிட்டார்.

இந்த வாதங்களை பதிவு செய்த நீதிபதி, நீதிமன்ற அனுமதியுடன் வெளிநாடு சென்றுள்ள கார்த்தி சிதம்பரம் மே 24 ஆம் திகதி நாடு திரும்புவதாக அவரது வழக்கறிஞர் தெரிவித்துள் ளார். கைது செய்யப்படுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு நோட்டீஸ் வழங்கப்படும் என்று சி.பி.ஐ. தெரிவித்துள்ளது. ஆனால், இந்தக் காலம் மிகவும் குறைவு என்று குறிப்பிட்டார்.

கார்த்தி சிதம்பரத்தை கைது செய்யும் நிலையில் குறைந்தபட்சம் 3 வேலைநாட்களுக்கு முன்பு நோட்டீஸ் வழங்க வேண்டும் என்று சி.பி.ஐக்கு உத்தரவிடுவதாகவும் நீதிபதி தெரிவித்தார். மேலும், கார்த்தி சிதம்பரம் நாடு திரும்பிய 16 மணிநேரத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும், என்றும் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி தமது உத்தரவில் குறிப் பிட்டுள்ளார்.

## ஜம்மு-காஷ்மீரில் விரைவில் தேர்தலை நடத்த மக்கள் விரும்புகிறார்கள் என்கிறார் உமர்



ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து 2019 ஆம் ஆண்டு ரத்துச் செய்யப்பட்டது. அதன் பின்னர் ஜம்மு-காஷ்மீரில் தொகுதி மறுவரையறை செய்யும் பணிகள் நடைபெற்று வந்தன. தற்போது தொகுதி மறுவரையறை பணிகள் நிறைவடைந்துள்ளன.

இந்தநிலையில், தேசிய மாநாட்டுக் கட்சியின் துணைத்தலைவரும், ஜம்மு-காஷ்மீர் முன்னாள் முதலமைச்சருமான உமர் அப்துல்லா, ஜம்மு-காஷ்மீரில் தேர்தல் நடத்துவது தொடர்பான முடிவை நாங்கள் எடுக்க முடியாது, என்று ஊடகச் சந்திப்பொன்றில் வைத்துக் கூறியிருக்கிறார்.

ஜம்மு-காஷ்மீரில் தேர்தல் நடத்துவது தொடர்பான முடிவை தேர்தல் ஆணையம்தான் எடுக்கும். எப்போது தேர்தலை நடத்தவேண்டும். எந்தச் சூழ்நிலையில் தேர்தல் நடத்த வேண்டுமென்பதையும் தேர்தல் ஆணையம் தான் முடிவு செய்யும். எவ்வளவு விரைவில் தேர்தல் நடத்தமுடியுமோ அவ்வளவு விரைவில் தேர்தலை நடத்தவேண்டுமென ஜம்மு காஷ்மீர் மக்கள் நினைக்கின்றனர். தற்போதைய நிர்வாகத்தால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர். தங்களின் கருத்துக்களை யாரும் கேட்காததால் மக்கள் கவலையுடன் உள்ளனர், என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## தங்கையின் கணவரை பழிவாங்க விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் பொலிஸாரால் கைது!

பெங்களூரு தேவனஹள்ளி அருகேயுள்ள கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து டெல்லி, சென்னை, தூத்துக்குடி, ஐதராபாத், உப்பள்ளி, பெலகாவி உள்ளிட்ட பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த விமான நிலைய காவல்துறைக் கட்டுப்பாட்டு அறைக்கு நேற்று அதிகாலை 3.30 மணி அளவில் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தியிருந்த நபரொருவர், விமான நிலையத்தில் வெடிகுண்டு வைத்திருக்கிறார் என தெரிவித்திருக்கிறார். தனது பெயரையும் தெரிவித்திருக்கிறார். இதையடுத்து பொலிஸார் மற்றும் வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் விமான நிலையத்துக்கு விரைந்து சென்று சோதனையிட்டுள்ளனர். மோப்ப நாய்கள் கொண்டு விமான நிலையம் முழுவதும் தீவிர சோதனை நடத்தப்பட்டது. இரு மணி நேரம் நடந்த இந்த சோதனையில் வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. எனவே, அது போலியான மிரட்டல் என தெரியவந்தது.

அதேசமயம் வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி, சுபாஷிஷ் குப்தா என்ற நபரை கைது செய்துள்ளனர். விசாரணையில் அவர் தன் தங்கையின் கணவரைப் பழிவாங்குவதற்காக, வெடிகுண்டு மிரட்டல் விடுத்திருப்பது தெரியவந்தது.

சுபாஷிஷ் குப்தாவின் தங்கையை அவரது கணவர் விவாகரத்து செய்யவுள்ளார் என கூறியிருக்கிறார். இதனால் அவர் மீது கடும் ஆத்திரமடைந்துள்ளார் சுபாஷிஷ் குப்தா. இதனால் அவரை சிக்கலில் மாட்டிவிடுவதற்காக அவர் பெயரைச் சொல்லி விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளார், என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.








# இறக்காமத்தில் வறிய குடும்பங்களுக்கு இலவச நீர், மின் இணைப்புகள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச குடும்பங்களில் வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் சுமார் 200க்கும் மேற்பட்ட வறிய குடும்பங்களை இனங்கண்டு அதில் 100 குடும்பங்களுக்கு இலவச நீர் வழங்குதல் மற்றும் வீட்டுக்கான மின் இணைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு 'ஸே யெஸ் – குடும்பங்களுக்கான நிவாரண நிதியம்' நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

சமூக செயற்பாட்டாளர் எஸ்.எல்.எம். றஜாவினால் இந்தக் குடும்பங்கள் இனங்காணப்பட்டு நேற்று முன்தினம் இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அதற்கான நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 'ஸே யெஸ் – குடும்பங்களுக்கான நிவாரண நிதியம்' நிறுவனத்தின் செயற்பாட்டாளர் பொறியியலாளர் சீ.கே. நிஷாத், இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். றஸ்ஷான், உதவித்திட்ட பணிப்பாளர் கே. ஹம்ஸார், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆஹிர், அய்மன் கலை மன்ற தலைவர் சன்சிர், அதன் செயற்பாட்டாளர் பீ.டீ. கலீல் உட்பட ஏனைய உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





## தந்தையை இழந்த ஏழைச் சிறாருக்கு மாதாந்தம் நிதியுதவி வழங்கும் திட்டம்

(க.கிருபாகரன்)

எஸ்.டபிள்யூ.ஓ. அமைப்பினால் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் ஆலய நிதியுதவி மூலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமப் புறங்களில் வாழும் தந்தையை இழந்த ஏழை மாணவர்களுக்கு மாதா மாதம் ரூபா 6,000 வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று மேற்படி நிறுவனத் தலைவர் நயனி கிருஷ்ணாகரனின் தலைமையில் புதுக்குடியிருப்பு வளநிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்குப் ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொது மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீயும், பிரதம அதிதியாக மண்முனைப்பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயமும் கலந்து கொண்டனர்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட தந்தையை இழந்த 16 வறிய மாணவர்களுக்குத் உதவித் தொகை கையளிக்கப்பட்டது.

இவ்வுதவித் தொகை எதிர்காலத்தில் அதிகரிக்கப்படவுள்ளதாக இந்நிறுவனத் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

## தம்பலகாமம் கோவிலடியில் உளவளத்துணை விழிப்புணர்வு

(ஹஸ்பர்)



நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு சமூகத்தை வலுவூட்டும் வகையில் தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கோவிலடி கிராம சேவையாளர் பிரிவில், உளவளத் துணை நிகழ்வொன்று நேற்று அந்தக் கிராம சேவையாளர் பிரிவுக் கட்டடத்தில் இடம் பெற்றது

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ. ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் திருமதி. மா. கொன்சலீன் இதில் வளவாளராக கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் வறுமைக்குள்ளும் வன்முறையற்ற மகிழ்வான குடும்ப வாழ்வை வாழ்வது எப்படி? என்னும் தொனிப்பொருளில் இடம்பெற்ற உளவள ஆலோசனையில் அன்றாடம் இடம் பெறும் வாழ்க்கை நடை முறை தொடர்பில் பொருளாதார நெருக்கடியில் சவால்களுக்கு முகங்கொடுத்தல் போன்ற விளக்கங்களும் பயிற்சிகளும் உளவளத்துணையாளரால் விழிப்புணர்வூட்டும் வகையில் வழங்கப்பட்டன.

இதில் அந்தக் கிராம சேவையாளர் பகுதியை உள்ளடக்கிய பெண்கள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்தோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## திருமலையில் இருந்து ஆஸி செல்ல முற்பட்ட 17 பேருக்கு விளக்கமறியல்

(எவ்.முபாரக்)

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக படகு ஒன்றில் செல்ல முற்பட்ட கைது செய்யப்பட்ட 17 சந்தேக நபர்களை அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

திருகோணமலை,மட்டக்களப்பு, கல்முனை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் கடல்மார்க்கமாக ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற போதே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இளம் குடும்பஸ்தர்கள் இருவர் மட்டக்களப்பில் டெங்கால் சாவு

*டெங்கு நோயால் இளம் குடும்பஸ்தர்கள் இருவர் மட்டக்களப்பு மாநகர பகுதியில் உயிரிழந்தனர் என்று மண்முனை வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி வைத்தியர் இளையதம்பி உதயகுமார் தெரிவித்தார். மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் கடந்த வியாழக்கிழமை வரை சுமார் 240 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.*

*இதனிடையே, நாட்டில் டெங்கு தாக்கம் அதிகமுள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதால் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மற்றும் விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

## வாழைப்பழ ரகங்களின் விலை அம்பாறை மாவட்டத்தில் சரிவு

கடந்த சில நாள்களாக, அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, கல்முனை அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் உள்ளிட்ட பகுதிகளில் வாழைப் பழங்களின் விலை சடுதியாக குறைவடைந்துள்ளது.

கதலி வாழைப்பழம் ஒரு கிலோகிராம் 150 ரூபாவுக்கும், ஆனை வாழைப்பழம் 120 ரூபாவுக்கும், செவ்வாழை 350 ரூபாவுக்கும், சீனி கதலி 120 ரூபாவுக்கும், கப்பல் அல்லது கோழி கூடன் வாழைப்பழம் 280 ரூபாவுக்கும், மொந்தன் வாழைப்பழம் 140 ரூபாவுக்கும், இதரை வாழைப்பழம் 130 ரூபாவுக்கும் தற்போது விற்பனை செய்யப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் கதலி உள்ளிட்ட வாழைப்பழங்களுக்கான கேள்வி அதிகரித்து இருக்கின்ற நிலையில், சந்தைக்கு அதிகளவு கதலி உள்ளிட்ட வாழைப்பழங்கள் கொண்டு வரப்படுவதால், இந்த விலைச் சரிவு ஏற்பட்டுள்ளது.

கொரோனா அனர்த்தம் மற்றும் உரப் பிரச்சினை உள்ளிட்ட காரணத்தால் வாழை உற்பத்தியில் ஏற்பட்ட சரிவு, கடந்த காலத்தில் விலை அதிகரிப்புக்குக் காரணமாக இருந்தது.

எனினும், தற்போது அந் நிலையில் இருந்து வாழைப்பழ செய்கையாளர்கள் மீண்டு அறுவடை அதிகரித்துள்ள நிலைமையே, இந்த விலை சரிவுக்கு காரணம் என வாழைச் செய்கையாளர்கள் கூறுகின்றனர்.

இது தவிர, கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளான மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வாழைப்பழங்கள் அதிக விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்!

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றது திட்டமிட்ட இனப்படுகொலை என வலி.மேற்கு பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. பிரதேச சபையின் அமர்வு நேற்று (வெள்ளிக்கிழமை) தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நடைபெற்றபோதே பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபை அமர்வின்போது உறுப்பினர் திருமதி ச.சுபாஜினி மேற்படி பிரேரணையை முன்வைத்து உரையாற்றினார். வன்னியில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு தாமும் ஒரு சாட்சியாளர் என அவர் எடுத்துரைத்தார். அங்கு இடம்பெற்ற வேதனைகளையும் வலிகளையும் உணர்ந்தவர் என்ற அடிப்படையில் அது இனப்படுகொலையே என அவர் கூறினார்.

இதன்போது, உறுப்பினர்களான ந.பொன்ரசா, சி.இதயகுமாரன், எச.ஜெயந்தன், சி.குணசிறி ஆகியோரும் இறுதியில் தவிசாளரும் குறித்த பிரேரணைக்கு ஆதரவாகத் தமது கருத்துக்களை முன்வைத்து உரையாற்றினர்.

இறுதி யுத்தம் என்ற பெயரில் அரசாங்கம் திட்டமிட்ட இனப்படுகொலையை அரங்கேற்றியது என்பதற்கு பல சான்றாதாரங்கள் உள்ளன என உறுப்பினர் பொன்ராசா தெரிவித்தார்.

அங்கு மூன்று லட்சம் மக்கள் மட்டுமே சிக்கியிருக்கின்றார்கள் என அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால், கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சிய ஐந்து லட்சம் வரையான பொதுமக்கள் வவுனியா நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்தனர்.

ஆனால், ஆறு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அங்கு வசிக்கின்றனர் என புள்ளிவிவரங்கள் தெரிவித்திருந்தன. பல லட்சம் பேரை திட்டமிட்டுக் கொன்றுவிக்கும் நோக்கத்துடனேயே அரசு யுத்தத்தை நடத்தியது என அவர் எடுத்துரைத்தார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஓர் இனப்படுகொலையாளி எனவும் நவாலி சென்.பீற்றர் தேவாலயம், செம்மணிப் படுகொலை உள்ளிட்ட பல படுகொலைகள் அவரது காலத்திலேயே இடம்பெற்றவை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று, கொல்லப்பட்ட உறவுகளுக்காக தீபமேற்றி அஞ்சலி செலுத்திய சந்திரிகா அப்படத்தை தமது முகப்புத்தகத்தில் தரவேற்றி முப்பது வருட காலம் இடம்பெற்றது இனப்படுகொலை என பதிவிட்டிருக்கிறார் எனவும் கூறினார்.

உலகில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள், போன்ற இரசாயன ஆயுதங்களைத் தமிழ் மக்கள் மீது வீசி கொடூரமாக அவர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என உறுப்பினர் ஜெயந்தன் தெரிவித்தார்.

தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றது இனப்படுகொலை என்பதை கனேடிய நாடாளுமன்றமே ஏற்று தீர்மானம் நிறைவேற்றியதை சுட்டிக்காட்டிய அவர், சர்வதேசம் இன்று தமிழர் பக்கம் தமது பார்வையைத் திருப்பியிருக்கின்றது எனவும் கூறினார்.

வன்னியில் அப்பாவி மக்கள் திட்டமிட்டு இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என உறுப்பினர் இதயகுமாரன் தமது உரையில் தெரிவித்தார். உணவைக்கூட அனுப்ப மறுத்து அரசாங்கம் தமிழ் மக்களை படுகொலை செய்தது என்பதை அவர் எடுத்துரைத்தார்.

இதேவேளை, தாமும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவன் என்ற அடிப்படையில் யுத்தத்தின் கொடூரங்களை எடுத்துரைத்தார் உறுப்பினர் குணசிறி.

கடந்த காலங்களில் தமிழர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வருடம் தடையின்றி நடைபெற்றதையும் அவர் சுட்டிக்காட்டினார். இறுதியில், தவிசாளர் தமது உரையில் –

வன்னியில் எமது மக்கள் கொத்துக் கொத்தாக இனப்படுகொலை செய்யப்பட்டனர். இதை ஆவணப்படுத்தவேண்டிய, இதற்கு நீதி கோரவேண்டிய வரலாற்றுக் கடமை எமக்கு உண்டு.

உலகமே பார்த்துக்கொண்டிருக்க எமது மக்கள் திட்டமிட்டு இன அழிப்பு செய்யப்பட்டார்கள். நாகரிகம் உள்ள மனித இனம் செய்யாத செயலை இலங்கை அரச படைகள் அரங்கேற்றியிருக்கின்றன.

இங்கு இடம்பெற்றது இனப்படுகொலையே என்ற தீர்மானத்தை நாம் இன்று இந்த உயரிய சபையில் நிறைவேற்றுகின்றோம். ஏனைய சபைகளும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, இந்த நூற்றாண்டில் இலங்கை அரச படைகள் நடத்திய அநாகரிகத்தை ஆவணப்படுத்தவேண்டும். – என்றார்.

இதேவேளை, இந்தத் தீர்மானத்தை முன்வைத்து சபை உறுப்பினர்கள் உரையாற்றிக்கொண்டிருந்தபோது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேறிச் சென்றிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# மஹிந்த நாடாளுமன்றுக்கு விமானத்தில் வரவில்லை!

## அவரது அலுவலகம் தெரிவிப்பு

நாடாளுமன்ற அமர்வுகளுக்காக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்டார் என சமூக ஊடகங்களில் வெளியான செய்திகளை அவரின் அலுவலகம் நிராகரித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் முன்னாள் ஒருங்கிணைப்பு செயலாளர் கீதாநாத் காசிலிங்கம், மஹிந்த ராஜபக்ஷ கொழும்பில் இருக்கிறார் எனவும், சமூக வலைதளங்களில் கூறப்படுகின்றமை போல் ஹெலிக்கொப்டரில் அவர் நாடாளுமன்றுக்கு வரவில்லை என்றும் வீதி வழியாகவே அவர் நாடாளுமன்றத்துக்கு வந்தார் எனவும் கூறினார். மேலும் சமூக ஊடகங்களில் வெளியான படம் பழையது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு உணவு உதவிகளுக்காக 15 லட்சம் டொலரை ஜப்பான் வழங்கும்

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உதவிகளை வழங்க இலங்கைக்கு ஜப்பான் 15 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்குகிறது.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவுவதற்கு 15 லட்சம் அமெரிக்க டொலர்களை (ரூபா 60 கோடி) வழங்குவதாக ஜப்பான் அரசாங்கம் அறிவித்தது.

இந்த நிதி ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தால் குழந்தைகள் மற்றும் ஆதரவு தேவைப்படும் குடும்பங்களுக்கு உணவு உதவி வழங்குவதற்கு பயன்படுத்தப்படும்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கைக்கான ஜப்பானின் பதில் தூதுவர் கட்சுகி கொட்டாரோ –

'நாடு முழுவதும் உள்ள சுமார் 15 ஆயிரம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும் 3 லட்சத்து 80 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கும் மூன்று மாதங்களுக்குத் தேவையான வலுவூட்டப்பட்ட அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குவதற்கு ஜப்பான் அரசாங்கம் உலக உணவுத் திட்டத்தின் ஊடாக 15 லட்சம் அமெரிக்க டொலர்கள் அவசர உதவியை வழங்கும் என்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜப்பான் கடந்த 10 ஆண்டுகளாக பாடசாலை உணவுத் திட்டத்துக்காக மொத்தம் ஒரு கோடி அமெரிக்க டொலர் மதிப்பிலான ஜப்பானில் தயாரிக்கப்பட்ட தகரத்திலடைக்கப்பட்ட மீன்களை வழங்குவதன் மூலம் சிறுவர்களுக்கு முக்கிய புரதத்தை வழங்கி வருகிறது.

இந்த மனிதாபிமான உதவி பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை மக்களுக்கு உணவு அணுகல் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்த உதவும் என நம்புகிறோம். – என இலங்கைக்கான ஜப்பானின் பதில் தூதுவர் கட்சுகி கொட்டாரோ தெரிவித்தார்.

பலவீனமடைந்து வரும் பொருளாதாரத்தால் இலங்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக உணவு உட்பட அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை மற்றும் உணவு விலைகள் அதிகரிப்பு, குடும்பங்கள் மலிவு விலையில் ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்கு தடையாக உள்ளது.

தொற்றுநோய்க்கு முன் பேருபவ் சிறுவர்கள் மற்றும் பெண்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு விகிதம் அதிகமாக இருந்தது. ஆரம்ப வயது குழந்தைகளில் சுமார் 40 சதவீதம் பேர் தங்கள் உயரத்திற்கு மிகவும் உடல் எடை குறைந்தவர்களாக இருக்கின்றனர்.

# எரிபொருள் விநியோகத்தை நிறுத்த வேண்டியிருக்கும்

## காஞ்சன விஜேசேகர எச்சரிக்கை

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை ஏற்றிச்செல்லும் கொள்கலன்களை சில குழுக்கள் அச்சுறுத்தி வருகின்றன என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குக் பயணிக்கும் லொறிகளை மடக்கிப் பிடித்து, அங்குள்ள எரிபொருள் நிலையங்களில் தரையிறக்குமாறும், அவ்வாறு இல்லையென்றால் லொறிகளுக்கு தீ வைப்பதாக சில குழுக்கள் அச்சுறுத்தி வருகின்றன எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுமானால் போக்குவரத்து ஊழியர்களின் நலன் கருதி எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை நிறுத்த வேண்டியிருக்கும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.05.2022இல் வெளியிடப்பெற்றது.